இயற்கை வளங்களை விணுக்கி-செயற்கை முறைகளில்
ஜனத்தொகைக் கட்டுப்பாடா?

Regd. No. M 6207.

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS
227
1-54

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி
(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)
[சர்வோதய பக்ஷ நூல்காணிக்கை அனுபந்தத்துடன்.]

மலர் 2 திருப்பூர் - ஜனவரி 1 * 1954 * விலை 1 அணு இதழ் 5

1954
பொங்கல்-சர்வோதய பக்ஷ விசேஷ கதர் விற்பனைக் கமிஷன்.

1954 ஜனவரி 1-ந்தேதி முதல் பிப்ரவரி மீ 12-ந்தேதி முடிய கதர் விற்பனை மீது தற்பொழுது கதர் போர்டு கொடுத்துவரும் கமிஷன் ரூபாய்க்கு மூன்றணுவோடு, சர்வ சேவா சங்கமும் பொங்கல் சர்வோதய பக்ஷத்தை முன்னிட்டு ரூபாய்க்கு இரண்டணு வீதம் விசேஷ கமிஷன் அனுமதிக்க தீர்மானம் செய்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்தி "தைப் பொங்கல்" விழாவையும், சர்வோதய பக்ஷத்தை யும், 'கதர்' திருவிழாக்களாகக் கொண்டாடி, ஏழை எளியோர்களுக்கும், மகிழ்ச்சியளிக்க உதவுங்கள்.

முகாம்: கழுகாசலபுரம்
20...12...1953

காரியதரிசி,
அகில பாரத சர்வ சேவா சங்கம்

யாருடைய லட்சியம் கைகூடாது?

சமீபத்தில் அகில இந்தியாவிலும் நூற்புப் போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு வழங்குவதற்கு ஒரு திட்டம் வகுத்து அகில இந்திய கதர் போர்டார் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தது, வாசகர்கள் அறிவார்கள்.

அந்த அறிக்கை மீது—

"இலட்சங்கள் செலவானுலும் இலட்சியம் கைகூடாது"

"எண்ணை செலவே ஒழிய, பிள்ளை பிழைக் காது"

"கதருக்கு செலவிடும் தொகை விழலுக் கிறைத்த நீரே"

என்ற தலைப்புகள் கொடுத்து விளக்கவுரை எழுதியிருக்கும் ஒரு கட்டுரையை எமக்கனுப்பி அதற்கு மறுப்பளிக்க வேண்டும் என்று ஒரு நண்பர் கூறுகிருர்.

இதற்கு பதில் நாம் 'கிராமோதயம்' வாயி லாக பிரதி மாதமும் அளித்து வந்துள்ளோம்.

'கைத்தொழி லொன்றற்றார்
கையிருந்தும் கையற்றார்;
மெய்த்தொழிலின் வேர்வையெலாம் பொன்.'

லட்சியம் கைகூடாது! ஆனுல் நமது லட்சியமா? அவர்கள் லட்சியமா? என்பதுதான் கேள்வி. இதற்கு பதிலளிக்க மக்களும் காலமும் தயங்கா!

— ஆசிரியர்

அமெரிக்க ஆதிவாசிகள்!

சிகப்பு இந்தியர்கள்

அமெரிக்க சிகப்பு இந்தியர்கள் (Red Indians) என்று கூறப்படும் ஆதிவாசிகளிடையே நான் இந்த ஆண்டு சுதந்திர தினத்தை கழிப்பேன். இந்த குடிகளுடன் பெயரில் மட்டுமின்றி, பல நூற்றுண்டுகளாக நாம் தொடர்பும் வைத்திருந்தோம்! இந்த ஆதிவாசிகள் அமெரிக்காவுக்கு ஆசியாவி லிருந்தே வந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படு கிறது.

பண்புடைய பூர்வ குடிகள்

மெதுவாக அவர்களுடைய பண்பும், பயனும், உயர்ந்துகொண்டே வந்தது. கலைகளிலும் நல்ல முன்னேற்ற மடைந்தார்கள். தேவதைகளை வணங்கி தொழுது வந்தார்கள். அதுவே அவர்கள் மதமாகவும் இருந்தது.

வெள்ளையர் வருகை

ஐரோப்பிய தேசங்களிலிருந்து மக்கள் கி. பி. 16-வது நூற்றுண்டில் இங்கு குடியேறத் துடங்கியபொழுது இந்த "சிகப்பு இந்தியர்களின்" ஜனத் தொகை சுமார் 1 கோடியாக இருந்தது. இன்று அதில் சரிபாதிதான்! ஐரோப்பியர்களுக்கு இந்த சிகப்பு இந்தியர்களுக்கும் சதா சண்டை மூண்டு வந்தது. தமக்குள்ளே, பல பிரிவினர்களிடையே யும் சண்டை நடந்து வந்தது. இந்த சண்டைகள் 19-வது நூற்றுண்டின் முற்பகுதிவரை நீடித்து வந்தது. கடைசியில் வெள்ளையர்கள் வெற்றி பெற்றனர். இந்த ஆதிகுடிகள் விரட்டியடிக்கப் பட்டனர். இவர்கள் மேற்கு அமெரிக்க வனாந் திரங்களில் வசிக்கும்படி ஒதுக்கப்பட்டனர். இன்று அமெரிக்காவில் இந்த "சிகப்பு இந்தியர்கள்" நிலை, நம் நாட்டில் ஆதிவாசிகளின் நிலைக்கொத்த வாறு இருக்கிறது.

ஏட்டு சுதந்திரங்கள் உண்டு; ஆனுல் தாழ்வுற்றிருக்கின்றனர்!

இப்பொழுது இந்த பிரஜைகளுக்கும் சுதந்திர ஜனநாயக உரிமை இருக்கிறது. இவர்களுக்கு ஓட்டுரிமையும் உண்டு. அவர்கள் அமெரிக்காவில் எங்கு விரும்பினுலும் வாழ்வதற்கும், தமது அறிவையும், ஆற்றலையும் வளர்த்து, எந்த பதவியை அடைவதற்கும் சட்ட ரீதியாக எவ்வித தடையுமில்லை! ஆனுல் இவை யாவும் காகிதத்தில் படிப்பதற்குத்தான் அழகாக இருக்கின்றன. உண்மையில் அவர்கள் இன்று வாழ்க்கைக்குத் தேவையான உற்பத்தி சாதனங்களின்றி, விவசாயத்திற்கு மிகவும் சாதாரண நிலத்தை வைத்துக்கொண்டு, ஒதுக்கப்பட்ட தனி (காலனி) பிரதேசத்தில் வாழ்ந்து வருகிருர்கள்.

இவர்களைப்பற்றிய அதிக விபரம் நான் அவர்களை பார்வையிட்ட பின்னர் தெரிவிக்கிறேன்.

மார்டின்வர்க்
(அமெரிக்கா)

— ஸ்ரீமதி சுசீலா பை.
காரியதரிசி,
அகில இந்திய கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதி

3 JAN 1956

கிராமோதயம்

ஜனவரி 1 **1954**

இயற்கை வளங்களை விருத்தி செயற்கை முறைகளில் ஜனத்தொகைக் கட்டுப்பாடா?

கர்ப்பத்தடைவாதிகள்!

தாய் தந்தையினர் விருப்பத்திற்கும், மனோ நிலைக்கும் தகுந்தவாறு குழந்தைகள் பிறக்கின்றனர். இது இவ்வாறுதான் நடக்கவேண்டும் என்பதும் ஒரு தேசிய உரிமை. ஆனல் சமீபகாலத்தில் ஒருசாரார் குழந்தைகள் இவ்வாறு பிறக்கலாகாது என்றும், எப்படியும் இப்பொழுது பிறக்கும் எண்ணிக்கையில் பிறத்தல் கூடவே கூடாது என்றும் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணங்களில் முக்கியமானது "பொருளாதார" பிரச்னைகளே ஆயினும், அவர்களில் யாரும் பொருளாதார பிரச்னையைப் பற்றி ஆராயத் தகுதியுள்ளவர்கள் அல்லர்.

ஜன நெருக்கத்தால் பயனடையும் பொருளாதார வேலைகள்:

பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பகுதி (முழுமையும் இல்லை) 'அதிகரித்து வரும் பயன்' என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது — (Law of increasing returns). இந்த நடவடிக்கைகளில் ஏராளமாக இயந்திர சாலைகள் அமைத்து பெருவாரியாக பொருட்களை உற்பத்தி செய்தல், போக்குவரத்து, தபால் தந்தி பாங்கிகள், இன்ஷுரன்ஸ், முதலியன அடங்கும். இவைகளை எவ்வளவுக்கெவ்வளவு பெருவாரியாக நடத்துகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு பொருளாதாரப் பயன் கிட்டும். ஆகையால் இம்மாதிரி தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, ஜனத்தொகை அதிகரிப்பினல் பொருளாதார ரீதியில் நன்மையே பிறக்கும். ஆகையால் ஏராளமான மக்கள், நெருங்கி வாழ்வது இம்மாதிரி பொருளாதார வேலைகளுக்கு இன்றியமையாதது. சில சந்தர்ப்பங்களில் இவையின்றி, இம்மாதிரி வேலைகளே நடைபெற முடியாது.

அதிகரித்து வரும் பயனும், குறைந்துவரும் பயனும்

'அதிகரித்துவரும் பயன்' (Law of increasing returns) மால்துஸ் போன்ற பொருளாதார விஞ்ஞானிகளுக்குத் தெரியாது. அவர்கள் 'குறைந்து வரும் பயன்' (Law of diminishing returns)தான் அறிவார்கள். ஆனல் இந்த தத்துவம் விவசாயம், சுரங்கம், குடிசைத் தொழில்கள் போன்றவைக்குத்தான் பொருந்தும் என்று தற்காலத்திய ஏனைய பொருளாதார நிபுணர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்த "குறைந்துவரும் பயன்" என்ற தத்துவம் போதிப்பதும் மிகவும் சாதாரணமான ஒரு விஷயமே. கூடுதல் முதலீடும், விவசாயத்தில் சீர்திருத்தப்பட்ட புதிய முறைகளையும் கடைப் பிடிக்காவிடில், ஜன நெருக்கமான பிரதேசங்களில், ஜன நெருக்கமில்லாத பிரதேசங்களைக் காட்டிலும், விவசாயத்திலிருந்து குறைந்த விளைச்சலே கிடைக்கும் என்று சாதாரணமாக யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய விஷயத்தையே, இந்த தத்துவம் போதிக்கிறது.

அதிகம் மூலதனமும் – சீர்திருந்திய முறைகளும்

வளர்ந்துவரும் ஜனத்தொகையை சமாளிக்க எல்லா முன்னேற்ற நாடுகளும் அதிகப்படி மூலதனத்தையும், சீர்திருத்திய விவசாய முறைகளையுமே கடைப்பிடிக்கின்றன. இது தத்துவ ஆராய்ச்சி மட்டுமல்ல. இது இன்று நடைபெறும் பிரத்தியக்ஷ அனுபவம்.

ரஷ்யாவும் – டென்மார்க்கும்

இன்று ரஷ்யாவிலும், டென்மார்க்கிலும் சாகுபடியாகும் ஒரு சதுர மைல் நிலத்தில் வசிக்கும் ஜனத்தொகை சமமாக இருக்கிறது. ஆனல் டென்மார்க்கில், ரஷ்யாவில் உற்பத்தியாவதைக் காட்டிலும், சராசரி ஐந்து மடங்கு அதிகம் உற்பத்தியாகிறது.

இதே போன்று அயர்லாந்துடன், பிலிப்பைன் தேசத்தை ஒப்பிடலாம்.

இந்தியாவும் இத்தாலியும்

இந்தியாவில் விவசாயம் செய்யப்படும் ஒரு சதுர மைலில் வாழும் மக்களின் தொகை மிகவும் அதிகம். இதனல் பலர் பீதியடைகிறார்கள். இது மிக அதிகம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனல் இத்தாலியிலும் இந்தியாவைப்போன்றே விவசாய நிலத்தில் ஜன நெருக்கம் அதிகம். ஆனல் இத்தாலியில் இந்தியாவைக் காட்டிலும், தலா இரு மடங்கு அதிக வருமானம் கிடைக்கிறது.

பெரிய கனவுகளைக்காட்டிலும் எளிய உதவிகள் தேவை

ஆகையால் இன்று யாராவது இந்திய விவசாயிகளுக்கு இயந்திர கலப்பையைப் பற்றியும், இயந்திரங்கள் மூலம் பால் கறப்பதைப் பற்றியும் போதிப்பதற்கு பதிலாக, இத்தாலிய விவசாய முறைகளையும், பால் பண்ணைகள், பழத்தோட்டம், முதலிய எளிய தொழில்களில் அறிவு புகட்ட முடியுமானல், இன்று இருப்பதைக் காட்டிலும், ஒரு சராசரி இந்தியன், இரு மடங்கு சுகமாக வாழ்ந்து வருவான்.

இந்தியாவும் – நெதர்லண்டும்

இந்தியர்களைப் போலவே, டச்சுக்காரர்களும் (Dutch) சிறந்த விவசாயிகள். அங்கு விவசாய மக்கள், சாகுபடியாகும் ஒரு சதுர மைலுக்கு இந்தியாவிலிருப்பதில் மூன்றில் இரண்டு பங்கு வீதம் இருக்கிறார்கள். ஆனல் சதுர மைலுக்கு அவர்களுக்கு இந்தியாவைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிக வருமானம் கிடைக்கிறது.

உலகின் உற்பத்தி சக்தி!

உலகிலுள்ள விளை நிலங்கள் அனைத்தும் டச்சு தேச நிலையில் சாகுபடி செய்யப்பட்டு, உலகிலேயே அதிக உணவு அருந்தும் தேசங்களில் ஒன்றாகிய டச்சு தேசத்தினருக்கு சமானமாக உலக மக்கள் அனைவரும் உணவருந்துவார்களேயானல், உலகில் இன்று உயிர்வாழும் சுமார் 250 கோடி மக்களுக்கு பதில் 1000 முதல் 1500 கோடி மக்கள் சுகவாழ்வு வாழலாம். இது எதிர்காலத்தில் விவசாய முறைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களையும், சீர்திருத்தங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கூறுகிறேன். மட்டரக நிலத்தில் விளையக்கூடிய அளவு விளைச்சல் கடல் பரப்பிலும் கிடைக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுவதையும் நான் இந்தக் கணக்கில் சேர்க்கவில்லை. பிற உலகங்களுக்கு சில வருடங்களில் நாம் குடியேற முடியும் என்பதையும் நான் இதில் சேர்க்கவில்லை.

மனிதனுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லை!

இந்த விசித்திரமானயோசனைகளை பரீட்சித்து பார்த்து அனுபவிக்க மனித வர்க்கமே பிழைத்திருக்குமா என்ற சந்தேகமும் ஒருபக்கம் தோன்றுகிறது. கிருஸ்துவர்கள், உலகத்தின் அழிவு ஒரு நிச்சயித்த நாளில் ஏற்படும் என்று நம்புகின்றனர்.

3 - JAN 1956

டார்வின், உலகம் இன்னும் 10 லக்ஷம் வருடத்திற்குப் பிறகுதான் அழியும் என்று கூறும் பொழுது அவரது விவேக சக்தியை மிகைப் படுத்துவதாக, பலர் கருதுகிறார்கள்.

கைத்தொழில் நாடுகளும் — விவசாய நாடுகளும்

கைத்தொழில் வளர்ச்சி மிகுந்த நாடுகளின் ஜனத்தொகை நெருக்கடியைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவை தங்கள் கைத்தொழில் பொருட்களை பின்தங்கிய நாடுகளில் விற்பனைசெய்து அதற்குபதிலாக உணவுப் பொருட்களை வாங்குவது சாத்தியமென்று நம்புகின்றன. தற்கால உலகில் விவசாயத்திற்கு லாயக்குள்ள பெரும் நிலப் பரப்புகள் சாகுபடி செய்யப் படாமல் தரிசாகக் கிடக்கிறது.

இங்கு நிலமில்லை; அங்கு நலமில்லை!

ரஷ்யாவை நீக்கி இதர ஐரோப்பிய நாடுகளில் சுமார் 14 லக்ஷம் சதுர மைலுக்கு சமமான விவசாய நிலம் இருக்கிறது. இதில் ஐரோப்பியர்கள் சுமார் 45 கோடி மக்களின் பெரும்பகுதி உணவையும் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் வட அமெரிக்காவில் இதைக்காட்டிலும் மிகக் குறைவான ஜனத்தொகையினருக்கு சுமார் 50 லக்ஷம் சதுர மைல் விளைநிலங்கள் இருக்கிறது. இவை இரண்டைக்காட்டிலும் சொல்ப ஜனத்தொகையுடைய தென் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும், தலா 60 லக்ஷம் சதுர மைல் வீதம் விளைநிலங்கள் இருக்கிறது.

ஆசியாவில் கூட ஜன நடமாட்டமில்லாத விளைநிலங்கள்

ஆசியாவில் கூட ஸிலோன், பர்மா, சையாம், மலேயா, ஜாவா நீங்கலாக இந்தோனேஷியா பூராவும், மற்றும் சில பிரதேசங்களில் நல்ல பயன் தரக்கூடிய விளைநில பிரதேசங்களில் மக்கள் குடிபுகவே இல்லை என்று சொன்னால் நீங்கள் வியப்படைவீர்கள்! ஆனால் உண்மை!

மேற்கு சீனாவில்

மேற்கு சீனாவில் கூட, காய்ந்த தரிசு நிலமாகக் கிடக்கும் நிலப்பரப்பிலும் கூட, ஆங்காங்கு ஒரு அமெரிக்க அல்லது ஆஸ்திரேலிய விவசாயி சுகவாழ்வுக்குரிய வருமானம் தேடிக்கொள்வது சாத்தியமே என்று ஓ. இ. பேக்கர் என்பவர் கூறுகிறார்.

உஷ்ணப் பிரதேச ரசாயனம்

நான் உஷ்ணப் பிரதேசங்களில் வாழ்ந்துள்ளேன். நான் சிறிது ரசாயன சாஸ்திரமும் அறிவேன். பல உஷ்ணப் பிரதேச நாடுகளில் விவசாயத்திற்கு தீங்கு தரக்கூடிய ரசாயனக் குறைகள் அந்நாட்டு மண்ணில் காணப்படுகிறது. கால்ஷியம், பொடாஸ்ஸியம், பாஸ்பரம் போன்ற இந்த குறைகளை முயற்சி செய்தால் போக்கலாம் என்றும் நம்புகிறேன்.

லிஸ்னர்,
26—3—'53. } **பேராசிரியர், காலின் க்ளார்க்**

கஸ்தூரி ரங்கபுரம் கிராமோதய கதர் சங்கம்

ஊரும், திருவும்;

கஸ்தூரி ரங்கபுரம் திருநெல்வேலி ஜில்லாவின், கோவில்பட்டி தாலுக்காவில், கோவில்பட்டிக்கு மேற்கே சுமார் 13 மைலில் இருக்கிறது. இந்த சிற்றூரின் ஜனத்தொகை சுமார் 350 பேர்கள்; 67 குடும்பங்கள். மொத்தம் சுமார் 700 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு லாயக்கானதாக இருக்கிறது. அதில் சுமார் 20 குடும்பங்களுக்கு நிலமே இல்லை. மொத்தம் கிராமத்தில் 97 ராட்டைகள் இருக்கின்றன. அங்கு மாதம் சுமார் 5000 சிட்டம் நூற்கப்படுகிறது. இதை நெசவு செய்யும் பொருட்டு கிராமவாசிகளே தறி போட்டுக் கொடுத்து, நெசவாளிகள் வசிப்பதற்கும் ஏற்பாடு செய்து தந்துள்ளார்கள்.

பொதுநல வேலைகள்

கிராமப் பொதுநல வேலைகளில் சுற்றுவட்டார கிராமங்களைக் காட்டிலும் இங்கு கூடுதல் ஆர்வமும் ஒத்துழைப்பும் கிடைத்து வருகிறது என்று சொல்லத் தேவையில்லை.

1951 ஜனவரி முதல் நாளது வரை இந்த கிராமத்தின் பொதுநல வேலைகளுக்காக சுமார் ரூ. 11,000 செலவாகியுள்ளது. இதில் சுமார் ரூ. 7000 கிராம ஜனங்களே சேகரித்தனர். பாக்கி ரூ. 4,000 சர்க்கார் கிராண்டு மூலமாகவும், கிராமாபிவிருத்தி இலகாவினர் உதவி மூலமும் இதர ஸ்தாபனங்கள் மூலமும் கிடைத்திருக்கிறது.

ஒருமையும், ஒத்துழைப்பும்:

கிராமப் பொது வேலைகளுக்காக கிராம ஜனங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பு வியக்கத்தக்கது. நில சொந்தக்காரர்கள் தமது உடமைக்குத் தகுந்தவாறு சங்கிலி (chain) ஒன்றுக்கு ரூ 10 வீதம் கடன் தந்து உதவியுள்ளார்கள். இம்மாதிரி ரூ 1,800 சேர்ந்தது. கிராம எல்லைக்குள் வளரும் பசுந்தாள் உரம் யாவும் சேகரிக்கும் உரிமையை விற்பனை செய்ததின் மூலம் சுமார் ரூ. 1,200 கிடைத்துள்ளது. ஏரி, குளத்திலுள்ள வண்டல் விற்பனை செய்த வகையில் ரூ. 800 கிடைத்துள்ளது. பொதுக் காடுகளிலுள்ள மரம் விற்பனை செய்ததின் மூலம் ரூ. 750 கிடைத்தது. ஊர் காவலுக்காக வசூலித்த காவல் வரி மூலம் ரூ. 700 கிடைத்தது. இதர வகைகளில் ரூ. 830 வசூலாயிற்று. கிராமாபிவிருத்தி இலாகாவினால் சுமார் ரூ 1,000மும், சர்க்கார் மான்யம் ரூ. 1,176ம், பஞ்சாயத்து வருமானம் ரூ 370ம் கிடைத்திருக்கிறது.

சம்பூர்ண வேலைத்திட்டம்

இவைகளைக்கொண்டு, கிராமத்திற்குள் வரும் ரோட்டுப் பாலம் அமைக்க ரூ 3000மும், குளத்திற்குப் படித்துறையும் மேடையும் கட்ட ரூ. 4,500 ம் ஏரிக்கரை செப்பனிட ரூ. 500 ம், கால்வாய் மராமத்துக்கு ரூ 470 ம், ரோடு போட ரூ. 400ம். பள்ளிக்கூடம் கட்ட ரூ. 833 ம், கிராமப் பாதுகாப்புக்காக காவல் கூலி ரூ 550, குடிதண்ணீர் கிணறு வெட்ட ரூ. 730ம் செலவிடப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக கிராமத்தில் பூரண வேலைத்திட்டம் வகுத்து விவசாயத்தை பொதுவாக்கியோ, கூட்டுறவு முறையில் சீரமைத்தோ, விவசாயப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இவையாவும் டி ஊர் கிராமோதய கதர் சங்கத் தலைவர் ஸ்ரீ ஆர். ராமசாமி நாயக்கர் அவர்களின் உற்சாகம், ஊக்கம், மக்களிடமுள்ள நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றுவருகின்றன.

— **என். எஸ். சுப்பிரமணியம்**

நாகர்கோவில் விபாகத்தில் சில கிராமோதய கதர் சங்கங்கள்

சந்தையடி:

கன்யாகுமரிக்கு மூன்று மைல் வடக்கே கொட்டாரத்திற்கு சமீபமுள்ள சந்தையடி என்ற சிறு கிராமத்தில் கதர் வேலையோடு, தேனீ வளர்க்கும் வேலையும் நடைபெற்று வருகிறது. அந்த கிராமோதய கதர் சங்க காரியதரிசி ஸ்ரீ ஆர். சந்திரசேகரன் ஆழ்ந்த கதர் பக்தர். தேனீ வளர்ப்பு முறையில் பயிற்சி பெற்றவர். சுமார் 20 கூடுகள் வைத்திருக்கிறார். கிராமத்திலும் ஆங்காங்காக சுமார் 7, 8 கூடுகள் கொடுத்துள்ளார். சராசரி ஒரு கூட்டிலிருந்து மாதந்தோறும் ரூ 2/- பெருமானமுள்ள ஒரு ராத்தல் தேனுக்கு குறையாமல் கிடைக்கும் என்று தெரிவிக்கிறார். அவருக்கு இந்த வேலையில் தனது சகோதரர் ஸ்ரீ தங்கையா அவர்களிடமிருந்து சிறந்த உதவி கிடைத்துவருகிறது.

பூவியூர்:

இங்கும் கதர் வேலையோடு சில வீடுகளில் தேனீ வளர்க்கப்படுகிறது. பெரும்பாலோர் பதனீர் ((Sweet Toddy) இறக்கி அதை கருப்பட்டி அல்லது பனைவெல்லம் காய்ச்சும் தொழில் செய்து வருகின்றனர். அந்த கிராமோதய கதர் சங்கத்தினர் கிராமத்திலிருக்கும் வீடில்லாத ஏழைகளுக்கு குடியிருப்பு வசதி செய்வதற்கும், நூலுக்கு பதில் உணவுதான்யங்கள் போன்ற பண்டங்களை மாற்றிக்கொள்ளும் ஒரு பண்டகசாலை நிறுவவும் யோசனை செய்து வருகிறார்கள். இந்த சங்கத்திற்கு திருவாங்கூர்-கொச்சி சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி நாடார் அவர்கள் பெருத்த உதவியும், ஊக்கமும் அளித்துவருகிறார்.

குளித்துறை:

குளித்துறைக்கு அடுத்த 'பாகோடு' என்ற கிராமத்தில் கிராமோதய கதர் சங்கம் ஏற்படுத்தி சென்ற சில மாதம் வேலை செய்து வந்துள்ளது. அங்கு நடைபெறும் விசேஷ வேலைகளில் ஒன்று நூற்போரில் நான்கு பேர்கள் சென்ற 6 மாதத்திற்குள் நெசவுக் கற்றுக்கொண்டு, சிறப்பாக நெய்து வருகிறார்கள் என்பதே. இத்துடன் தேனீ வளர்ப்பும், கோழிப்பண்ணையும் நடைபெறுகிறது. சாதாரணமாக நமது நாட்டில் ஒரு கோழி வருடத்திற்கு 90 முதல் 120 முட்டைகள்தான் தரும். ஜப்பானில் சுமார் 300 முட்டைகள் தருகின்றனவாம். இந்த கிராமத்தில் ஒரு கோழி வருடத்திற்கு சுமார் 320 முட்டைகள் வரை தந்துள்ளது!

எழுசாத்துப்பட்டு:

கொட்டாரம் கிளையோடு இணைந்த இந்த கிராமோதய கதர் சங்கத்தினர் சுமார் 7 பர்லாங் நீளமும் சுமார் 22 அடி அகலமும் உள்ள ஒரு பாதையை கிராம ஜனங்கள் சுயமுயற்சியினாலேயே போட்டுள்ளார்கள். இந்த நிலமனைத்தும் கிராம ஜனங்களே நன்கொடையாக அளித்தனர். அவர்கள் உழைப்பாலேயே ரோடு உருவாயிற்று. ஷை ரோடுக்கு ஜல்லி பரப்ப சர்க்கார் உதவுவதாக வாக்களித்துள்ளது.

— ஸ்ரீ என். பி. ராகவபொதுவாள்

சிறு திட்டங்கள் போதும்; பிறர் பிச்சை வேண்டாம்

"இன்று வேறு பல நாடுகளில் அவர்களுடைய நீர்வளத்தை பயன்படுத்தியுள்ளதை பார்க்கும் பொழுது நாம் மிகவும் பின்தங்கி விட்டோம். உதாரணமாக ஜப்பானில் மொத்த நீர்வளத்தில் சுமார் 60 சதவிகிதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு நம் நாட்டில் 12 முதல் 15 சதவிகிதம் தான் பயன்படுகிறது. மற்ற 85 முதல் 88 சதவிகிதம் வீணாகிறது.

"ஐரோப்பாவில் ரூர், பிரனீஸ் (மத்ய பிரான்ஸ்) போன்ற பிரதேசங்களில், அங்கு ஓடும் ஆறுகளின் சிறு ஏற்றத்தாழ்வுகளை பயன் படுத்தி, சமீபமுள்ள சிறு கிராமங்களில் நடைபெறும் சிறு கைத்தொழில்களுக்கு மட்டும், மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டங்கள் வகுத்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பிரனீஸ் பிரதேசத்தின் தொழில் வளர்ச்சி, பெரிய சில மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தல்லாமல், அநேகம் சிறு திட்டங்களை வகுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தென் பிரான்ஸிலும் இதே முறைதான் கையாளப்பட்டிருக்கிறது. சர்க்கார் முன்வந்து சிறு சாதனங்களைத் தயாரிக்க இயந்திர சாதனங்களைக் கடன் கொடுத்தது. அல்லது கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்தது. உதாரணமாக ஸ்விட்ஜர்லாந்தில் கைகெடிகாரங்கள் ஒரு குடிசைத் தொழிலாகவே நடைபெறுகிறது, கெடிகாரத்தின் பல நுண்ணிய பாகங்களும், பல வீடுகளில் தயாரிக்கப்படுகிறது. இந்த பாகங்களை ஒன்றுசேர்த்து கடிகாரமாக்கும் வேலை மட்டும் தலைநகரில் நடைபெறுகிறது. இம்முறை இந்தியாவில் கையாளப்படுமானால் பல தொழில்களும் பயனடையும்.

ஜப்பானில், அவர்களுடைய கைத்தொழில் பிரச்னையைத்தீர்க்கப்பெரிய அணைக்கட்டுகளெனச் சொல்லுவதற்கு ஒன்றுகூட அமைக்கப்படவில்லை.

இந்தியாவும் அதே வழியைப் பின்பற்றிச் சிறந்த பயனடையலாம்.

சென்னை,
26—12—'53. } டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்.

தமிழ்நாட்டில் சங்கர் ராவ் தேவ்

இதுவரை தமிழ்நாட்டில் பூமிதான யாத்திரை செய்துவரும் ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் அவர்களுக்கு நெல்லை ஜில்லாவில் மட்டும் 3,003 ஏக்கர் நிலம் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ எம். ஜி. சங்கர்,
கன்வீனர், நெல்லை ஜில்லா பூமிதானக் கமிட்டி.

கழுகாசலபுரம் கிராமோதய கதர் சங்க மகாநாடு

நெல்லை ஜில்லாவில், எட்டையாபுரத்திற்கு சமீபமுள்ள கழுகாசலபுரம் என்ற சிற்றூரில் சென்ற டிசம்பர் 19, 20 தேதிகளில் திருநெல்வேலி ஜில்லா கிராமோதய கதர் சங்க மகாநாடு சர்தார் ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 200 பிரதிநிதிகளும், ஏராளமான பார்வையாளர்களும், பல பிரமுகர்களும் விஜயம் செய்து மகாநாட்டை சிறப்பித்தனர்.

— ப. நம்மாள்வார்.

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்படுகிறது.)

இந்த இதழில்

பொங்கல்-சர்வோதய பக்ஷ விசேஷ கதர் விற்பனை கமிஷன் 17
யாருடைய லட்சியம் கைகூடாது? 17
அமெரிக்க ஆதிவாசிகள் 17
இயற்கை வளங்களை வீணாக்கி- செயற்கை முறைகளில் ஜனத்தொகைக் கட்டுப்பாடா? 18
கஸ்தூரிரங்கபுரம் கிராமோதய கதர் சங்கம் 18
நாகர்கோவில் விபாகத் கதர் சங்கங்கள் 19

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.
Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.